


34 ஆவது ஆண்டில்
Tel: 416-282-8059
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
email: vlambaram@sympatico.ca www.vlambaram.com




நதி: 34 பாலம்: 18 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் SEPTEMBER 15, 2024

# இலங்கை அதிபருக்கான தேர்தல்

2024 செப்ரெம்பர் 21ஆம் திகதி இலங்கை அதிபருக்கான தேர்தல் நடைபெற உள்ளது. இலங்கை அதிபராக இருப்பவர் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரச தலைவர் (Head of State) மற்றும் அரசாங்கத்தின் தலைவரும் (Head of Government) ஆவார். அவர் மத்திய அரசாங்கத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியாகவும், இலங்கை ஆயுதப் படைகளின் தலைமை தளபதியும் (Commander in Chief) ஆவார். இலங்கை அதிபருக்கான பதவிக்காலம் ஐந்து வருடங்கள் ஆகும்.

2019 நொவெம்பர் 16ஆம் திகதி நடைபெற்ற எட்டாவது இலங்கை அதிபருக்கான தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ 52.3%மான வாக்குகளைப் பெற்று இலங்கை அதிபராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அவருக்கு எதிராகப் போட்டியிட்ட சஜித் பிரேமதாச 42%ஆன வாக்குகளைப் பெற்றிருந்தார். அப்போது பதிவு செய்யப்பட்டிருந்த 16 மில்லியன் வாக்காளர்களில் 83.7%ஆனோர் வாக்களித்திருந்தனர். அத்தேர்தலில் 35 பேர் அதிபர் பதவிக்குப் போட்டியிட்டிருந்தனர். அவ்வேட்பாளர்களில் பெண் வேட்பாளர் மற்றும் தமிழ் வேட்பாளர்கள் இருந்தனர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராக ம.க. சிவாஜிலிங்கம் இத்தேர்தலில் போட்டியிட்டு அண்ணளவாக 1%ஆன (12,256) வாக்குகளைப் பெற்றிருந்தார்.

பின்னர் 2022ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களின் எதிர்ப்பு எழுச்சியால் 2022 ஜூலை 14இல் அதிபர் கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினார். இலங்கை அரசியல் அமைப்பின்படி நாடாளுமன்றம் அதிபராக ஒருவரை அதிகப்படியான வாக்குகளால் பதவி விலகிய அதிபரின் மிகுதிக்காலத்திற்குத் தெரிவு செய்யலாம். இவ்வாறு அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தில் அதிகப்படியான வாக்குகளால் இலங்கையின் ஒன்பதாவது அதிபராகத் தெரிவு செய்யப்பட்டு 2022 ஜூன் 21இல் இலங்கை அதிபராகப் பதவியேற்றார். அதனால் அவரின் பதவிக்காலம் 2024 நொவெம்பர் 17ஆம் திகதியுடன் முடிவடைகிறது.


Sri Lankan President Ranil Wickremesinghe
Thanks: Wikipedia

2024 ஜூலையில் இலங்கையின் தேர்தல் ஆணையம் அதிபர் தேர்தல் 2024 செப்ரெம்பர் 21ஆம் திகதி நடத்தப்படும் எனவும் வேட்பாளர்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்யும் இறுதி நாள் ஓகஸ்ற் 15ஆம் திகதி எனவும் வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டது. அதிக மக்களின் வாக்குப்பதிவை உறுதி செய்ய தேர்தலை சனிக்கிழமை நடத்துவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்தது.

இலங்கை அதிபர், நாடாளுமன்றம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்திற்குமான தேர்தல்களை நடத்த, நிர்வகிக்க மற்றும் மேற்பார்வை செய்வதற்காக இலங்கை அரசியல் அமைப்பின்படி அதிகாரம் தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் 1931ஆம் ஆண்டு முதல் உலகளாவிய வயது வந்தோருக்கான 'ஒருவருக்கு ஒரு வாக்கு' என இன, மத, மொழி மற்றும் பால் வேறுபாடு இன்றி (Universal Suffrage) வாக்களிக்கும் முறை அமல்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு நாட்டுமக்கள் எல்லோருக்கும் வாக்களிக்கும் உரிமையை வழங்கிய முதலாவது பிரித்தானியாவால் ஆளப்பட்ட நாடாக இலங்கை இருக்கிறது. பிரித்தானியா தனது சொந்த நாட்டு மக்கள் எல்லோருக்கும் வாக்குரிமையை 1928ஆம் ஆண்டிலேயே வழங்கியது. ஐக்கிய அமெரிக்கா தனது மக்கள் எல்லோருக்கும் வாக்களிக்கும் உரிமையை 1960ஆம் ஆண்டிலேயே வழங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. ஆசியாவிலேயே மிகவும் பழமையான ஜனநாயக நாடாக இலங்கை இருக்கிறது என 'Financial Times' ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அதிபர் வரையறுக்கப்பட்ட தரவரிசை வாக்களிப்பு முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார். வாக்காளர் அதிபர் பதவிக்கு மூன்று தரவரிசை விருப்பங்களை வெளிப்படுத்தலாம் (Three ranked preferenes). வாக்குச் சீட்டுகளில் வேட்பாளர் பெயர் மற்றும் சின்னங்களுடன் அவற்றுக்கு அருகில் தமது தெரிவை இடும் பெட்டி இருக்கும்.

அதில் வாக்காளர்கள் தாம் விரும்பும் வேட்பாளருக்கு 1 எனவும், தமது அடுத்த விருப்பமான வேட்பாளருக்கு 2 எனவும், தமது மூன்றாவது விருப்பமான வேட்பாளருக்கு 3 எனவும் எழுதலாம்.

இவ்வாறு ஒரு வாக்காளர் தமக்கு விருப்பமான மூன்று வேட்பாளர்களுக்கு தமது விருப்பு வரிசையில் 1, 2, 3 என எழுதுவதன்மூலம் தமது வாக்கைப் பதிவு செய்யலாம்.

தேர்தல் ஆணையம் மக்களுக்கு எவ்வாறு வாக்களிக்கலாம் என ஊடகங்கள்மூலம் ஓகஸ்ற் 30இல் அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளது. அருகில் உள்ள தேர்தல் ஆணையத்தின் அறிவித்தலைப் பார்க்கவும்.

அதில் ஒருவர் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று வாக்குகளை 1, 2, 3 என எழுதுவதன்மூலம் அளிக்கலாம் அல்லது ஒரு வாக்கை புள்ளடி

தொடர்ச்சி 05ஆம் பக்கம்


















உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,
மகளிர் கல்லூரி பழைய
மாணவர்கள் பெருமையுடன்
வழங்கும்

முற்றிலும்
புதுமையான நிகழ்வுகளுடன்,
நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும்

# வானவில் 2024

## இயல்–இசை–நாடகம்

கோடை காலத்தின் குளிர் தென்றல்

SEPTEMBER 28 SATURDAY 6:00 PM

இரண்டு நாட்கள்

SEPTEMBER 29 SUNDAY 6:00 PM

**Armenian Youth Centre**
50 Hallcrown Pl. North York, M2J 1P6

## பேச்சுப் போட்டி

Saturday, August 24, 2024 at 9:00AM

**Talenta Academy**
2020 Ellesmere Road, Unit #2, Toronto, ON M1H 2Z8

முதலிடம் பெறுபவருக்கு தங்கப் பதக்கம் பரிசாக வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
647-760-6689, 416-697-1317,
647-969-1154, 416-918-2464

Available Till Midnight
Including Weekends & Holidays



ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# ஜனாதிபதித் தேர்தல் குழப்பங்களைத் தோற்றுவிக்குமா?

– அரவின் –

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும் ஒரு வாரம்கூட இல்லாத நிலையில், யாருக்கு பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கும் என்ற கேள்வியே நீடிக்கிறது.

அதாவது தெளிவான பெரும்பான்மை வாக்குகளுடன் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவதற்கான சாத்தியம் மிகவும் மங்கலானதாகத்தான் உள்ளது.

அண்மையில், சுகாதாரக் கொள்கை நிறுவகம், வெளியிட்டிருக்கின்ற கருத்துக் கணிப்பின்படி, அனுரகுமார திசநாயக்க, முன்னிலையில் இருக்கிறார். அவருக்கு 36 சதவீத மக்கள் ஆதரவு இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

அவரை அடுத்து சஜித் பிரேமதாசவுக்கு 32 சதவீத ஆதரவும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 28 சதவீத ஆதரவும் காணப்படுவதாகக் கூறுகிறது சுகாதாரக் கொள்கை நிறுவகம். நான்காம் இடத்தில் இருக்கும் நாமல் ராஜபக்சவுக்கு மூன்று சதவீத ஆதரவே இருப்பதாகவும் அந்த ஆய்வு கூறுகிறது.

இந்த நான்கு பேரில், ரணில் விக்கிரமசிங்க தவிர ஏனைய மூவரும், கடந்த ஆறு மாதங்களில் செல்வாக்குச் சரிவை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 12 சதவீதமாக இருந்த ரணிலுக்கான ஆதரவு, 28 சதவீதமாக அதிகரித்திருக்கிறது. 39 சதவீதமாக இருந்த சஜித் பிரேமதாசவுக்கான ஆதரவு 32 சதவீதமாகவும், 41 சதவீதமாக இருந்த அனுரகுமாரவுக்கான ஆதரவு 36 சதவீதமாகவும் கீழ் இறங்கியிருக்கிறது. இது சுகாதாரக் கொள்கை நிறுவகம் கூறுகின்ற ஒரு தரவு.


விளம்பரம்
VLAMBARAM

34ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com

Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

இதுபோல பல கருத்துக்கணிப்புகள் வெளியாகின்றன. சிலவற்றில் ரணில் விக்கிரமசிங்கவும், சிலவற்றில் சஜித் பிரேமதாசவும் முன்னிலையில் இருப்பதாகக் காட்டப்படுகிறது.

ஆனால் நடைமுறையில் நிலைமை எப்படி இருக்கிறது என்பது கணிப்புகளுக்கு அப்பாற்பட்ட விடயமாகவே தெரிகிறது.

ஏனென்றால் இந்தத் தேர்தலில் வாக்குகள் பிளவுபடுவது தெளிவாகத் தெரிகிறது. அதனால் யாருக்கும் 50 சதவீத வாக்குகள் கிடைக்கப் போவதில்லை என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.



இதன் அர்த்தம், யார் மீதும் உறுதியான நம்பிக்கை வைக்கக்கூடிய நிலையில் இலங்கை மக்கள் இல்லை என்பதேயாகும். யாரும் இலங்கை மக்களின் நம்பிக்கையைக் கட்டி எழுப்பக்கூடிய அளவில், வல்லமை பெற்றவர்களாக இல்லாதிருப்பது முக்கியமான விடயம்.

இந்தத் தேர்தலில் வெளிப்படப் போகும் இந்த விடயமானது பாரதூரமான ஒன்று.

முக்கால் நூற்றாண்டு கால சுதந்திர இலங்கையின் வரலாற்றில் தமிழ் தேசிய இனத்தின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் போனதும், அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட வன்முறைகள், போர், இனப்படுகொலைகள், எல்லாவற்றினதும், விளைவாக உருவாகிய பொருளாதாரப் பேரழிவு இப்படி ஒரு நிலையை உருவாக்கிவிட்டிருக்கிறது.

மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஒருவரைக்கூட, தெரிவு செய்யமுடியாத நிலைக்கு இலங்கையின் அரசியல் கீழ் நோக்கி வீழ்ச்சி கண்டு கொண்டிருக்கிறது. இரண்டாவது சுற்று வாக்கு எண்ணிக்கை என்ற புதிய அத்தியாயத்திற்குள் இலங்கையின் தேர்தல் முறை நுழைய வேண்டிய கட்டாயத்தை உருவாக்கி இருக்கிறது.

இப்போதைய சூழ்நிலையில் அதுவே நடக்கப் போகிறது என்பது பெரும்பாலும் தெளிவாகத் தெரிகிறது.

அடுத்த சிலநாட்களுக்குள் எல்லாமே மாறி விடுவதற்கு வாய்ப்புகள் குறைவு. ஏனென்றால் முடிந்தளவிற்கு தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் வாக்காளர்களுக்கு சலுகைகளை அறிவித்துவிட்டது.

சம்பள அதிகரிப்பு தொடக்கம் பல்வேறு திட்டங்கள் வரைக்கும் அவர்களின் வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டு விட்டன.

இவ்வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு நாட்டின் தற்போதைய பொருளாதாரநிலை போதுமானதாக இருக்காது என்ற நிலையில் இனிமேலும் புதிய வாக்குறுதிகளை கொடுக்கக்கூடிய சூழல் கிடையவே கிடையாது.

சஜித் பிரேமதாசவும்சரி அனுரகுமார திசநாயக்கவும்சரி அடுத்துவரும் நாட்களில் வாக்களிப்பின் போக்கை மாற்றக்கூடிய அளவுக்குப் புதிய வாக்குறுதிகளைக் கொடுக்கக்கூடிய நிலையில் இல்லை.

இலங்கையின் பொருளாதார வல்லமைக்கு அப்பால் சென்று யாரும் வாக்குறுதிகளைக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கின்றனர்.

அவ்வாறு வாக்குறுதி கொடுத்துவிட்டு சர்வதேச நாணய நிதியத்தின் முன்பாக நிற்க முடியாது.

அதேவேளை பிரதான வேட்பாளர்கள் எவராலும் திடீர் கவர்ச்சியை வாக்காளர்கள் மத்தியில் உருவாக்கிவிடவும் முடியாது. இதனால் அடுத்த சில நாட்களுக்குள் எந்த ஒரு வேட்பாளரும் 50 சதவீதத்தைத் தாண்டக்கூடியவர்களாக இருப்பர் என்று எதிர்பார்க்க முடியாது.

இவ்வாறான சூழலில் வரப்போகும் ஜனாதிபதித் தேர்தல் இலங்கைக்கு மிகவும் சிக்கலான ஒன்றாக இருப்பதற்கு வாய்ப்புகள் அதிகம்.

இரண்டாவது சுற்று வாக்கு எண்ணிக்கைக்கு செல்லும்போதும்சரி, குறைந்தபட்ச மக்கள் ஆணையுடன் புதிய ஜனாதிபதித் தேர்வு செய்யப்படும் போதும்சரி, நிலைமைகள் எந்தளவுக்கு மாற்றம் காணும் என்பது முற்கணிப்புகளுக்கு அப்பாற்பட்டதாகவே இருக்கிறது.

தேர்தலுக்கு முன்னர் அதாவது பிரசாரம் முடிந்தபின்னர் வன்முறையைத் தூண்டுவதற்கும் முயற்சிப்பதாக அந்தப் பழியை தங்களின்மீது போடுவதற்குத் திட்டமிடப்படுவதாகவும் ஜேவிபி கூறுகிறது.

சிலர் தங்களின் அரசியல் நலனுக்காக ஜேவிபியை பலிக்கடா ஆக்க முற்படுகின்றனர் என அவர்கள் கொந்தளிக்கின்றனர்.

அதேவேளை, பல்வேறு பிரச்சாரங்களின் போது, வெளிப்பட்ட ஜேவிபியினரின் கருத்துகள் அவர்களின் கடந்த காலம் குறித்த நினைவூட்டல்களைச் செய்கின்ற சூழலையும் ஏற்படுத்தியிருக்கிறது.

தேர்தலுக்கு முன்னரோ தேர்தலுக்குப் பின்னரோ பாதுகாப்பு சூழ்நிலைகள் மாற்றம் காணலாம் என்றும் அது குழப்பங்களுக்கு வழி வகுக்கலாம் என்றும் ஓர் எதிர்பார்ப்பு நிலவுகிறது.

அதன் அடிப்படையில் பாதுகாப்புத் தரப்புகள் தயார் நிலையில் வைக்கப்படுகின்றன. இது ஒன்றும் அனுமானங்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட தீர்மானமாக இருக்காது.

புலனாய்வுத் தரவுகளின் அடிப்படையில் எடுக்கப்படும் நடவடிக்கைகளாகவே தெரிகிறது.

நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்த இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 200 பேர் தயார்படுத்தப்பட்டிருப்பதாக ஒரு யூடியூப் காணொளி வெளியாகியிருந்தது. வெளிநாட்டில் வாழும் அஜித் தர்மபால அதனை வெளியிட்டிருக்கிறார். இதை யடுத்து, அவருக்கு எதிராக, இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர், பிரிகேடியர் சந்திக மகாதந்தில, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்திருக்கிறார். இவையெல்லாம் சாதாரணமான விடயங்களாகத் தெரிய வில்லை.

ஏனென்றால் இப்போது ஜேவிபியிடம் ஒரு முன்னாள் இராணுவ அதிகாரிகள் குழு இருக்கிறது. சஜித் பிரேமதாசவிடமும் இருக்கிறது. ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பின்னாலும் இருக்கிறது. நாமல் ராஜபக்சவுக்குப் பின்னாலும் சரத் பொன்சேகாவுக்குப் பின்னாலும்கூட விசுவாசமான படை அதிகாரிகள் அணிகள் உள்ளன.

அவர்களில், போரின்போதும், போருக்குப் பின்னரும் மனித உரிமைமீறல்களில் ஈடுபட்டோரும் இருக்கின்றனர். அவ்வாறானோருக்குத் தேர்தல்களின்போது வன்முறைகளில் ஈடுபடுவதோ, வன்முறைகளை நிறைவேற்றுவதோ கடினமான காரியமல்ல.

இத்தகைய சூழலில்தான் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பாதுகாப்புப் பலப்படுத்தல் என்பது மக்களை பாதுகாப்பதற்கானதா, தற்போதைய அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கானதா அல்லது புதிதாகத் தெரிவு செய்யப்படப் போகும் ஜனாதிபதியையும் அவரைச் சார்ந்தோரையும் பாதுகாப்பதற்கானதா? என்ற கேள்வி இருக்கிறது.

ஏனென்றால் தேர்தலைச் சார்ந்து ஏற்படக் கூடிய வன்முறைகளில் மக்களே பாதிக்கப் படக்கூடிய சாத்தியங்கள் அதிகம். அண்மையில் பல நாடுகளில் இவ்வாறான சம்பவங்கள் நடந்தேறி இருக்கின்றன.

அது இலங்கையில் நடந்து விடக்கூடாது என்ற எதிர்பார்ப்புகள் இருந்தாலும் அதனையும் தாண்டி புதிய முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அவ்வாறான நடவடிக்கைகள் தான் இப்போது எடுக்கப்பட்டு இருக்கின்றன.

ஜேவிபி கிளர்ச்சிக்கு மத்தியில், மிகவும் பதற்றம் நிறைந்த சூழலிலேயே 1988 ஜனாதிபதித் தேர்தல் நடந்தது.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# இலங்கை.....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

போடுவதன் மூலமும் அளிக்கலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒரு வாக்கும் அளிக்காமல் விடுவது அல்லது இரண்டு தரம் 1 என எழுதுவதன்மூலம் தவறாக இரண்டு வாக்குகள் அளிப்பது, X, 1 என தவறாக இரண்டு வாக்குகள் அளிப்பது, 2, 3 என அல்லது X. 2. 3 என அல்லது 1, 2, 3, 4 என மூன்றுக்கு மேற்பட்ட எண்கள் எழுதுவது மற்றும் வேட்பாளர்களது சின்னத்தை வரைவது ஆகிய முறைகளில் அளிக்கப்படும் வாக்குச்சீட்டுகள் செல்லுபடியற்றவையாக அறிவிக்கப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.




வாக்கெடுப்பு நடைபெற்று முடிவடைந்த பின்னர் வாக்குகள் எண்ணப்படும்போது ஒரு புள்ளடி மட்டும் இடப்பட்ட வாக்குகளும், 1 என எழுதப்பட்ட வாக்குகளும் மட்டுமே முதலில் எண்ணப்படும். அவ்வாக்குகளின் எண்ணிக்கையில் ஒரு வேட்பாளர் அளிக்கப்பட்ட செல்லுபடியான மொத்த வாக்குகளில் 50%இற்கு மேல் ஒரு வாக்காதல் பெற்றிருந்தால் அவர் இத்தேர்தலில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும்.

இவ்வாறு முதல் தரம் எண்ணப்படும் போது ஒரு வேட்பாளரும் 50%இற்கு மேல் ஒரு வாக்காதல் பெற்றிருக்காவிட்டால் அதிக வாக்குகளைப் பெற்ற முதல் இரு வேட்பாளர்களைத் தவிர ஏனைய அனைத்து வேட்பாளர்களும் நீக்கப்படுவர். அவர்களுக்கு விழுந்த வாக்குச்சீட்டில் உள்ள வாக்காளர்களின் இரண்டாவது விருப்பு வாக்குகள் (பின்னர் மூன்றாவது விருப்பு வாக்குகள்) அதிக வாக்குகளைப் பெற்று இன்னமும் அதிபர் வேட்பாளராக இருக்கும் இருவருக்கும் வழங்கப்படும்.

அதிக வாக்குகளைப் பெற்ற முதல் இரு அதிபர் வேட்பாளர்களைத் தவிர ஏனைய வேட்பாளர்களுக்கு விழுந்த வாக்குச் சீட்டில் இரண்டாவது அல்லது மூன்றாவது தெரிவுகள் இல்லாவிட்டாலோ அல்லது அத்தெரிவுகளில் உள்ள வேட்பாளர்கள் நீக்கப்பட்டவர்களின் பட்டியலில் இருந்தாலோ அந்த வாக்குகள் செல்லுபடியற்றதாகக் கருதப்படும்.

இதன்பின்னர் முதல் இரு வேட்பாளர்களின் வாக்குகள் மீண்டும் எண்ணப்பட்டு செல்லுபடியான மொத்த வாக்குகளில் 50%இற்கு மேல் வாக்குகளைப் பெற்றவர் இத்தேர்தலில் வென்றவராக அறிவிக்கப்படும். இம்முறை செப்ரெம்பர் 21இல் நடைபெற இருக்கும் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு 39 பேர் வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தனர். இதில் ஒரு வேட்பாளராக 78 வயது முகமட் இலியாஸ் ஒகஸ்ற் 23இல் காலமானார். இவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கடந்த நான்கு முறை நடைபெற்ற அதிபர் தேர்தலிலும் போட்டியிட்டவரும் ஆவார்.

மீதம் உள்ள 39 வேட்பாளர்களில் குறிப்பிடத்தக்க சில வேட்பாளர்களது விபரங்கள் பின்வருமாறு.

• தற்போதைய இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்க சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடுகிறார். 75வயதான இவர் ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் தலைவர். தற்போது எரிவாயு கொள்கலன் (Gas Cylinder) சின்னத்தில் போட்டியிடுகிறார். இவருக்கு ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பவற்றில் இருந்து பிரிந்து சென்றோர், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி (EPDP) மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் (TMVP) ஆகிய கட்சிகளும் ஆதரவு வழங்குகின்றன.


Sajith Premadasa Thanks: Wikipedia

• ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் (STS) தலைவர் சஜித் பிரேமதாசா (வயது 57) தொலைபேசி சின்னத்தில் போட்டியிடுகிறார். இவருக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கைத் தமிழரசுக் கட்சி (ITAK), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி (TPA) மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளும் ஆதரவு வழங்குகின்றன.


Anura_Kumara_Dissanayaka Thanks: Wikipedia

• தேசிய மக்கள் கட்சியின் (NPP) தலைவரும், ஜனதா விமுக்தி பெரமுன (JVP)இன் தலைவருமான அனுரா குமார திஸாநாயக்க (வயது 22) திசையறி கருவி (Compass) சின்னத்தில் போட்டியிடுகிறார். இவருக்கு JVP கட்சியினரைத் தவிர குறிப்பிடத்தக்க வேறு கட்சிகள் ஆதரவு வழங்குவதாக அறிவிக்கவில்லை.

• ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் (SLPP) சார்பில் நாமல் ராஜபக்ஷ (வயது 38) தாமரை மொட்டு சின்னத்தில் போட்டியிடுகிறார். இவர் முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்ஷவின் மகன் ஆவார். இவருக்கும் SLPP கட்சியினரைத் தவிர குறிப்பிடத்தக்க வேறு கட்சிகள் ஆதரவு வழங்குவதாக அறிவிக்கவில்லை.


Lakshman Namal Rajapaksa Thanks: W

• தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பு மற்றும் சில சமூக அமைப்புகளின் ஆதரவில் பாக்கியசெல்வம் அரிய நேத்திரன் (வயது 69) சங்கு சின்னத்தில் போட்டியிடுகிறார்.


பாக்கியசெல்வம் அரியநேத்திரன்

வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட 39 வேட்பாளர்களில் 17 பேர் சுயேட்சை வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்றனர். இம்முறை பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களாக 17 மில்லியன் பேர் இருக்கின்றனர். இவர்களில் 52%ஆன வாக்காளர்கள் பெண்களாக இருந்தும் ஒரு அதிபர் வேட்பாளர்கூட பெண் அல்ல.

இலங்கை தேர்தல் ஆணையத்தின் அழைப்பை ஏற்று 15 பேர் கொண்ட பொதுநலவாய நாடுகளின் பார்வையாளர் குழு (Commonwealth Observer Group) சீஷெல்ஸின் (Seychelles) முன்னாள் அதிபர் Danny Farre தலைமையில் இலங்கையில் நடைபெறப் போகும் அதிபர் தேர்தலைக் கண்காணிக்க வந்துள்ளது.

இலங்கை அதிபர் தேர்தலில் இதுவரை அதிபர் முதல் தரம் எண்ணப்படும் வாக்குகளின் எண்ணிக்கையிலேயே 50%இற்கு அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியிருக்கின்றனர். ஆனால், இம்முறை முன்னணியில் மூன்று வேட்பாளர்கள் நிற்பதால் வாக்காளர் தமது வாக்குச்சீட்டில் வழங்கும் 2ஆம் மற்றும் 3ஆம் இடங்களுக்குத் தேவை ஏற்படலாம் என ஊடகவியலாளர் பலர் தெரிவிக்கின்றனர். ஒகஸ்ற் மாத ஆரம்பத்தில் வெளியான IHP நிறுவனத்தின் கருத்துக்கணிப்பு சஜித் பிரேமதாச 43%, அனுர குமார திஸாநாயக்க 30%, ரணில் விக்கிரமசிங்க 30% மற்றும் நாமல் ராஜபக்ஷ 7% வாக்குகளையும் பெறுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

For your Special Occasions
SHORT TERM RENTAL
TORONTO
Large House available for your Special Occasions Short Term Rental in Scarborough. Daily rental possible.
If Interested email :
georgeparan1@gmail.com


# தமிழ் அரசுக் கட்சிக்கு சாவுமணி

**– முகிலன் –**

ஜனாதிபதித் தேர்தல் இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு, சாவுமணியாக மாறி இருக்கிறது. அந்தக் கட்சி, தனது கைகளாலேயே தனக்குப் புதைகுழியைத் தோண்டிக் கொண்டிருக்கிறது.

அந்தக் கட்சியின் நிலையை, இதைவிட வேறு எப்படியும் கூறமுடியாது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகளுக்குள்தான் பெரும்பாலும் முரண்பாடுகள், பிளவுகள் ஏற்படும். வேட்பாளரை தேர்வு செய்வதில் அவ்வாறான முரண்பாடுகள் ஏற்படுவது வழக்கம்.

தமிழ் தேசிய அரசியல் கட்சிகளுக்கு அத்தகைய பிரச்சினைகள் எழுவது குறைவு.

எவ்வாறாயினும் 2010 ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதற்கு, இரா.சம்பந்தன் எடுத்த முடிவு தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் முதல்முறையாக பிளவை ஏற்படுத்தியது. அத்துடன், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கூட்டமைப்பை விட்டுப் பிரிந்து சென்றது.

அதற்குப் பிறகு, 2015, 2019 ஜனாதிபதித் தேர்தல்களில் சம்பந்தனும் சுமந்திரனும் கூறுவதைக் கேட்டு, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் மைத்திரிபால சிறிசேனவுக்கும் சஜித் பிரேமதாசவுக்கும் ஆதரவு கொடுத்தனர்.

இந்தமுறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லாமல் செய்யப்பட்ட நிலையில், 7 தமிழ்த் தேசிய கட்சிகள், சிவில் அமைப்புகளுடன் இணைந்து, தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தியிருக்க, தமிழ் அரசுக் கட்சி மாத்திரம், யாராவது ஒரு சிங்கள வேட்பாளரையே ஆதரிப்பேன் என்று ஒற்றைக் காலில் நின்றது.

தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது சாத்தியப்படாது என ஆதரவளிக்க மறுத்த தமிழ் அரசுக் கட்சியினர் பலரும், பொது வேட்பாளர் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பிரச்சாரம் தொடங்கியதும் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டனர்.

இந்தச் சூழலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி, இரண்டுபட்டு நின்றது. ஒரு தரப்பு சஜித் பிரேமதாசவை எப்படியாவது ஆதரிக்க வேண்டும் என்பதில் உறுதியாகவிருந்தது. அது சுமந்திரன் தலைமையிலானது.

இன்னொரு தரப்பு பொது வேட்பாளரை ஆதரித்து தமிழரின் திரட்சியை - பலத்தை வெளிப்படுத்த வேண்டும், பிரச்சினைகளை வெளிக்கொண்டு வரவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தது. இது சிறிதரன் தரப்பு.

மாவை சேனாதிராஜாவும் இந்த அணியில் ஆரம்பத்தில் இருந்தார். பின்னர் தட்டுத் தடுமாறி, சஜித் பக்கம் சாய்ந்து கொண்டிருக்கிறார்.

தமது கட்சித் தலைவருக்கு உடனடியாக சிலவிடயங்கள் புரியாது. தாமதமாகத்தான் புரிந்து கொள்வார் என்றுதான், சுமந்திரன் ஒரு செவ்வியையும் கொடுத்திருந்தார்.



பொது வேட்பாளருக்கு ஆதரவாக தமிழ் அரசுக் கட்சிக்குள் பலரும் குரல் கொடுக்கத் தொடங்கியபோது, அவசர அவசரமாக சுமந்திரன் தரப்பு, வவுனியாவில் கடந்த முதலாம் திகதி நடந்த மத்தியகுழுக் கூட்டத்தில் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு அளிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியது.

அந்தத் தீர்மானம் இறுதியானது, சரியானது என்று, கட்சியின் சிரேஷ்ட உபதலைவரான சிவிகே சிவஞானமும் கூறியிருந்தார். அவரது தலைமையில்தான் அந்தக் கூட்டமும் நடந்தது.

அப்போது, லண்டனில் இருந்த சிறிதரன் அதனை எதிர்த்தார். அவர் நாடு திரும்பியதும், கிளிநொச்சிக் கிளைக் குழுவின் கூட்டத்தைக்கூட்டி, மீண்டும் பொது வேட்பாளருக்கு ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்.

இந்த நிலையில், கடந்த 10ஆம் திகதி தமிழ் அரசுக் கட்சியின் உயர்மட்டக் குழுவின் கூட்டம் வவுனியாவில் கூட்டப் பட்டது. இந்தக் குழு கடந்த ஓகஸ்ற் மாதம் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுவினால் உருவாக்கப்பட்டிருந்தது.

பிரதான வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், அதனை அலசி ஆராய்ந்து யாருக்கு ஆதரவளிப்பது எனத் தீர்மானித்து, மத்திய குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிப்பது தான் இந்தக் குழுவின் பொறுப்பு.

மாவை சேனாதிராஜா, சிறிதரன், சுமந்திரன், சத்தியலிங்கம், சிவிகே சிவஞானம் மற்றும் மட்டக்களப்பு முன்னாள் மேயர் சரவணபவன் ஆகிய ஆறு பேர், அந்த உயர்மட்டக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

இக்குழு கூடாமலேயே அதன் அறிக்கை சமர்ப்பிக்கப்படாமலேயே சுமந்திரன் தரப்பு, கடந்த முதலாம் திகதி சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்தது. அந்த முடிவு அறிவிக்கப்பட்ட கூட்டத்தில், கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும் இருக்கவில்லை, சிறிதரனும் இருக்கவில்லை.

அவர்கள் இருவரும் அந்த முடிவுக்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். பின்னர் மாவை சேனாதிராஜாவை சமாளித்து இணங்க வைத்தனர்.

அந்தக் கூட்டத்தில் சரியான முறையிலேயே தீர்மானம் எடுக்கப்பட்டதாக, மத்தியகுழுக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய சிரேஷ்ட துணைத் தலைவர் சிவிகே சிவஞானமும் திட்டவட்டமாகக் கூறியிருந்தார்.

ஆனால் கடந்த 10ஆம் திகதி வவுனியாவில் மீண்டும் உயர்மட்டக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திலும் சரவணபவன் பங்கேற்கவில்லை.

இக்கூட்டத்தில், எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து மாவை, சிறிதரன், சுமந்திரன் ஆகியோர் வெளியிட்ட தகவல்களுக்கு இடையில் முரண்பாடுகள் உள்ளன.

செப்ரெம்பர் 15ஆம் திகதிக்குள் மீண்டும் கூடி ஆராய்ந்து ஓர் அறிக்கையை வெளியிடுவதாக மாவை சேனாதிராஜா அறிவித்திருக்கிறார்.

இதனால், மத்திய குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானம் மாற்றப்படுமா அல்லது அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமா அல்லது அதனை நியாயப்படுத்தும் வகையில் கருத்துக்கள் முன்வைக்கப்படுமா என்ற கேள்விகள் எழுந்தன.

ஆனால், சஜித் பிரேமதாசவை ஆதரிக்க தமிழ் அரசுக் கட்சி எடுத்த முடிவு இறுதியானது. அதில் எந்த மாற்றமும் இல்லை என்று, சுமந்திரன் திரும்பத் திரும்ப அறிவித்து வருகிறார்.

கட்சியின் பொதுச் செயலாளர் சத்தியலிங்கமும் அவ்வாறான அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

இதுவே இறுதியான முடிவு என்றால், தேர்தல் அறிக்கைகளை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் கூட்டம் ஏன் கடந்த 10ஆம் திகதி கூட்டப்பட்டது?

இதுவும் ஓர் அரசியல் சதித் திட்டம் தான்.

அந்த உயர்மட்டக் குழுவைப் புறக்கணித்து முடிவு எடுக்கப்பட்டது என்ற விவகாரம், கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்தும் என்பதாலேயே உயர்மட்டக் குழு கூட்டத்தை கூட்டுவதற்கு சுமந்திரன் தரப்பு முடிவு செய்தது.

ஆனால், அந்தக் கூட்டத்தில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. அத்துடன் மத்திய குழுவின் கூட்டத்தை 14ஆம் திகதி கூட்டுவதில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மீண்டும் மத்திய குழுவைக் கூட்டி முடிவெடுப்பதானால், அதற்குக் கால அவகாசம் தேவை. அதற்குள் தேர்தல் வந்துவிடும்.

இந்தநிலையில் உயர்மட்டக் குழுவைக் கூட்டியும் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை.

சுமந்திரன் தரப்பு இந்த முறையும் நிலைமையை தமக்குச் சாதகமாக மாற்றிக் கொண்டிருக்கிறது. இந்த விடயத்தில் ஏமாற்றப்பட்டது, ஏமாந்து போனது சிறிதரன் தரப்புதான்.

அவர் சுமந்திரனிடம் ஏமாறுவது இது இரண்டாவது முறை. முதல்முறை கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப் பட்டபின்னர், அந்தத் தீர்மானத்தை ரத்துச் செய்ய இணங்கியபோது அவர் முதல் முறை ஏமாந்து போனார்.

சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்குவது என்பது சுமந்திரன் தரப்பு ஏற்கனவே எடுத்துவிட்ட நிலைப்பாடு. அது பிரதான வேட்பாளர்கள் மூவரினது தேர்தல் அறிக்கைகளையும் ஆராய்ந்த பின்னர் எடுக்கப்பட்ட முடிவு அல்ல. அவ்வாறு கூறுவதெல்லாம் சுத்தப் பொய். ஏனென்றால் சஜித் பிரேமதாசவின் தேர்தல் அறிக்கையை தயாரித்துக் கொடுத்தவரே சுமந்திரன்தான். இதனை வேறுயாரும் கூற வில்லை. அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

சஜித் பிரேமதாசவின் தேர்தல் அறிக்கையை தயாரித்துக் கொடுத்தவர், ரணில் விக்கிரமசிங்கவினதோ, அனுர குமார திசநாயக்கவினதோ தேர்தல் அறிக்கைகளை நியாயமாகப் பகுப்பாய்வு செய்திருப்பார் என்று அல்லது அவற்றின் மீது உள்ள நம்பகத்தன்மையை சரியாக மதிப்பீடு செய்திருப்பார் என்று எவ்வாறு நம்ப முடியும்?

ஏற்கனவே ஒரு தீர்மானத்தை எடுத்து விட்டு அந்தத் தீர்மானத்தை நோக்கி தமிழ் அரசுக் கட்சியை இழுத்துச் சென்று விழுத்தியிருக்கிறார் சுமந்திரன்.

அந்தக் கட்சியின் தலைவர்கள் இதற்குப் பின்னரும், அவரைப் புரிந்து கொள்ளாமல் இருந்தால், அது அவர்களின் ஏமாளித்தனம் தான். இவ்வாறான ஏமாளித்தனம்தான், தமிழ் அரசுக் கட்சியை கையாளுபவராக சுமந்திரனை மாற்றியது.

தமிழ் அரசுக் கட்சி தனித்துவமாக இருப்பதாகக் காட்டிக்கொள்ள முற்பட்டு, இப்போது தமிழ் மக்களின் முன்பாக, நிர்க்கதியான நிலையில் இருக்கிறது. அந்தக் கட்சி இப்போது எந்த முடிவை எடுத்தாலும் அது சந்தேகத்துடன் பார்க்கப்படுகின்ற நிலையை ஏற்படுத்தி விட்டது.

இந்நிலையில் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் அரசு கட்சியின் ஆதரவோ, எதிர்ப்போ, ஏதேனும் ஒரு வகையில் தாக்கத்தை ஏற்படுத்துமா என்பது சந்தேகம்தான்.

# தமிழரின் வாழ்விடங்களும், கல்வியும்



பேராசிரியர்
மா. சின்னத்தம்பி

## கடந்த இதழ் தொடர்ச்சி...

இன்றைய (2024) நிலையில் தமிழ்மக்கள் உலகம் முழுவதும் பரந்து வாழ்கின்றனர். எனினும் இலங்கைத் தமிழர் இலங்கையிலும், இந்தியாவிலும், ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்திரேலியக் கண்டங்களில் பல நாடுகளிலும் வாழ்கின்றனர். ஆசியாவில் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற பல நாடுகளில் இலங்கைத் தமிழர் தமது பண்பாடு, மொழி, குடியுரிமை என்பவற்றைப் பேணும் உண்மை ஈடுபாட்டோடு வாழ்கின்றனர். 1980-2020களில் இந்த நான்கு தசாப்தங்களில் அவர்களது உலகளாவிய குடியமர்வுகளுடன் இணைந்து பெறுகின்ற அரசியல், பொருளாதாரம், கல்வி, தொழில் தொடர்பான முன்னேற்றங்கள் மிகவும் சிறப்பானவை. இவை பற்றிய ஏராளமான ஆய்வுகள் பல்வேறு பல்கலைக்கழகங்களாலும், ஆராய்ச்சி நிறுவனங்களாலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன, வளர்ச்சிபெற்று வருகின்றன.

இலங்கைத் தமிழரது கல்வியானது பன்மைத்துவ மாதிரியில் வளர்ச்சி பெற்று வருகின்றது. வரலாற்று ரீதியில்,

- புராதன காலக்கல்வி (1505இன் முன்)
- ஐரோப்பிய குடியேற்ற ஆட்சியாளர் காலக்கல்வி (1505-1947)
- சுதந்திர இலங்கையின் கல்வி (1930-1960)
- இலங்கையின் அரசாங்க காலக்கல்வி (1961-1999)
- உலகமயமாதலில் கல்வி (2000 - 2024)

இலங்கைத் தமிழரை பொறுத்து கல்வியின் புதிய திசைகளின் வழியான வளர்ச்சியென்பது இளைஞர்களின் அரசியல் முனைப்புகளோடும், பல்வேறு அரசியல் இயக்கங்களின் எழுச்சியோடும் தொடர்புபட்டும் குடியகல்வு முனைப்புடனும் இணைந்தே நிகழ்ந்து வருவது கவனிக்கத்தக்கது.

தமிழர் என்பது இனி இலங்கைத் தமிழரையே இக்கட்டுரையில் சுட்டுவதாகக் கொள்ளவேண்டும். மொழி சார்ந்த உணர்வுகள், அதன் வழியான உரிமைகள் அதன்வழியாக மேற்கிளம்பிய அரசியலோடு தான் கல்வி பற்றிய முரண்பாடுகளும் முனைப்படைகின்றன. ஆரம்பக் கல்வியில் இருந்து பல்கலைக்கழகக் கல்விவரை தாய்மொழியில் அரச கல்வி நிறுவனங்களில் அரச நிதிச்செலவில் திறமை அடிப்படையில் கற்கின்ற உரிமைகளை 1930-1970கள்வரை பெற்றவர்கள் இலங்கைத்தமிழர். இடைநிலைக்கல்வி அல்லது மேல்நிலைக் கல்வித்தகைமையுடன் நிரந்தரமான அரச தொழில்களைப் பெறுவதில் முன்னுரிமை பெற்றவர்கள். ஆங்கிலேயருக்கு அதியுயர் விசுவாசத்தை வெளிப்படுத்தியும், தரமான ஆங்கில மொழித் தேர்ச்சியைப் பெற்றும் பெரும்பான்மையினரான சிங்கள மக்களைவிட அரச தொழில்களை அதிகம் பெற்றோர். இத்தகைய மதிப்பீடு சார்ந்த குற்றச்சாட்டு சிங்கள அரசியல்வாதிகளால் வலுவாக முன்வைக்கப்பட்டதுண்டு. அதன்வழி மொழி மற்றும் உயர்கல்வி கற்பதற்குரிய இலசவக்கல்வி வாய்ப்பும் அரசியல் அதிகாரத்தின் வழியாக மட்டுப்படுத்தப்படுகின்றன. 1971இலிருந்து புதிய சமுதாய கவன ஈர்ப்பாகவும் கல்வியின் அரசியல் வளர்ச்சி பெறுகின்றது.

கல்வி என்பது பொருளாதார சமூக அந்தஸ்து, வசதிகள் நோக்கி மக்களை நகர்த்துவதற்குக் கிடைக்கின்ற இலவச வாய்ப்புத்தான். இது தடைப்படும்போது சமுதாயத்தில் முடிச்சுகள் விழுகின்றன. முரண்கள் வலுப்பெறுகின்றன.

தமிழ்மொழி உரிமை, தமிழ்வழிக்கல்வி என்று உரிமை அரசியல் நடத்திய தமிழரின் அடுத்த தலைமுறையினர் புலம்பெயர்ந்து குடியேறிய பல நாடுகளில் டச் (Dutch), பின்னிஸ் (Finnish), பிரென்ஞ் (French), டெனிஸ் (Danish), ஆங்கில (English) மொழிகளில் தொடக்கக் கல்வியில் இருந்து உயர்கல்விவரை எதுவித அரசியல் கோபமும் இல்லாமல் கற்கின்றனர். அவை குடும்ப, சமூக தொடர்பாடல் மொழியாகவும் வளர்ச்சி பெற்றுள்ளன. இது ஒருவகையான சமூக வலையமைப்பைப் பின்னுவதற்கான உபாயம், உடன்பாடு. உலகமயமாதலின் பரவல் பயன்பாடுகளைத் தம் வசப்படுத்துவதற்குரிய மொழி, கல்விசார் உடன்பாடு தான். இது சரியானதுதான்.




சமுதாயத்துக்குரிய இலக்கிய உலகில் இது மிகமிகப் பொதுவானதாகவும், அதிக சமுதாயப் பெறுமானமுடையதாகவும் விளங்குகிறது. தமிழர் மலையாளத்தில் எழுதுவதும் மலையாளி தமிழில் எழுதுவதும் சிங்களவர் தமிழில் மொழிபெயர்ப்பதும், தமிழர் ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதும் இவ்வகை மொழிவாரி சமூக செழுமைதான்.

இன்று தமிழ் மொழிக்கான இருக்கைகள் அமெரிக்க, கனடிய பல்கலைக்கழகங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. புலம்பெயர்ந்து தமிழர் வாழ்தலின் புதிய பரிமாணம் இது.

கல்வி உலக ரீதியில் ஒரு பொருளாதாரத் துறையாக வளர்ச்சி பெற்றுவிட்டது. கடல் கடந்த பல்கலைக்கழகங்கள், மொழி போதிக்கும் நிறுவனங்கள், திறன் விருத்தி செயல் திட்டங்கள் உலகம் முழுதும் சர்வதேச வணிக ஏற்பாடாகவே வளர்ந்து வருகின்றது. பல பில்லியன் (Billion) டொலர்கள் முதலிடப்படுகின்றன. பல நாடுகளின் தொழில் முனைவோரும், கல்வியாளர்களும் கூட்டாக இணைந்து பணிபுரிகின்றனர். கல்வி பற்றிய பார்வையும், செயல்படும் ஒழுங்கும், பயனாளிகளும் அதிகரித்து விட்டனர், மாறிவிட்டனர்.

வளரும் நாடுகளின் இளைஞர்களையும், அவர்கள் கொண்டுவரும் அந்நியச் செலவாணியையும் நம்பி செல்வந்த நாடுகளில் பெரிய பல்கலைக்கழகங்கள் தம்மை விரிவுபடுத்துகின்றன. பன்முகப்படுத்துகின்றன. விமானசேவையும், தகவல் தொழில்நுட்பமும் விசைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் புதிய மாற்ற விசைகளில் தமிழரும் தம்மைப் பிணைத்துக்கொண்டு வளர்ந்து வருகின்றனர்.

இலங்கைத் தமிழரது உலகரீதியான கல்விப் பரம்பல், தராதரம், புத்தாக்கம், கல்விசார் தொழில்நுட்ப முன்னேற்றம், பன்முகப்படுத்தல் என்பவற்றில் தொடர்ச்சியான மாற்றங்கள் பலவும் தவிர்க்க முடியாதவாறு வளர்ச்சி பெற்று வருகின்றது.

வாழும் பிரதேசங்களின் அடிப்படையில் இலங்கைத் தமிழரது சமகாலக் கல்வி நிலைமை தொடர்பான வளர்ச்சியை பின்வருமாறு நோக்க முடியும்.

- இலங்கையில் தமிழர் கல்வி
- புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் கல்வி

### 1. இலங்கையில் தமிழர் கல்வி

இலங்கையில் தமிழ் மொழிமூலம் ஆரம்பக் கல்வியிலிருந்து உயர்கல்விவரை கற்போர் இலங்கைத் தமிழர் என்று குறிப்பிடலாம். பண்பாட்டு அடிப்படையிலும் நீண்டகாலம் வாழ்வதன் அடிப்படையிலும் இலங்கைத் தமிழர் கல்வி வளர்ச்சி, கல்விப் பிரச்சினைகள் தொடர்பாக பின்வருமாறு உரையாடல்களில் குறிப்பிடப்படுவதுண்டு.

- யாழ்ப்பாணத் தமிழர் கல்வி
- கொழும்புத் தமிழர் கல்வி
- மலையகத் தமிழர் கல்வி
- இஸ்லாமியத் தமிழர் கல்வி
- புத்தளம் பிரதேச தமிழர் கல்வி
- கிழக்கு மாகாணத் தமிழர் கல்வி

வாழும் புவியியல் பிரதேச உற்பத்தி, தொழில் மாதிரிகள், கல்வி கற்றல் பற்றிய பண்பாட்டுப் பார்வை, கல்வி நிறுவனங்களின் வளர்ச்சி, பெண்களின் கல்விக்குரிய தூண்டுதல்கள் போன்ற பல்வேறு காரணிகள் கல்வி வளர்ச்சியைத் தீர்மானிக்கின்றன.

தேசிய ரீதியிலான கல்வி பற்றிய அரசாங்கக் கொள்கைகளும், ஊக்குவிப்பு செயற்பாடுகளும்கூட குடும்பங்களின் ஊக்குவிப்புக்கள், கல்வியில் செலவிடுவது பற்றிய சமூக நம்பிக்கைகள் என்பனவும் இத்தகைய புவியியல் பிரதேசம் சார்ந்த கல்வியின் வளர்ச்சி வேறுபாடுகளை தொடர்ந்தும் தீர்மானித்து வருகின்றன.

(தொடரும்)






## நாமும் நமது இல்லமும் 662

# உரிமை வழங்கும் பத்திரம் மற்றும் கடைசி உயில்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

## Power of Attorney and Last Will

எமது வாழ்வில் இந்த இரண்டு பத்திரங்களையும், நிச்சயமாகப் பூர்த்தி செய்து வைத்திருக்க வேண்டும். எவரிற்கும், எந்த நேரத்திலும் என்ன நிகழும் என்று தெரியாது. எம்மில் தங்கியிருப்பவர்களின் எதிர்காலத்தை முன்னிட்டு தத்துவப் பத்திரம் (Power of Attorney) மற்றும் இறுதி உயில் (Last Will)ஐப் பூர்த்தி செய்து வைத்துக்கொள்வது நல்லது. இதன் நகல்களை நம்பிக்கைக்கு உரியவர்களுக்குத் தெரியப்படுத்துவதுடன் ஒரு பிரதியை அவர்களிடம் கொடுத்து வைப்பது சிறப்பானதாகும்.

இந்தப் பத்திரங்களை நாங்களே பூர்த்தி செய்து வைத்துக்கொள்ள முடியும். என்னுடைய அபிப்பிராயம், ஒரு தகுந்த சட்டத்தரணியைக் கொண்டு முறையாகப் பூர்த்தி செய்து வைத்துக்கொள்வது சிறப்பாகும்.

தத்துவப் பத்திரம் (P.O.A - Power of Atterney) என்பது ஒருவர் தன்னால் பிரதிநிதித்துவம் செய்ய முடியாத சந்தர்ப்பத்தில் தனக்குத் தேவை ஏற்படும்போது தனக்குப் பதிலாக இன்னொருவரிடம் கொடுக்கும் ஒப்பமிட்ட பத்திரம். தத்துவப் பத்திரம் கொடுத்தவர் மரணிக்கும்வரை தத்துவம் பெற்றவர் தத்துவப் பத்திரம் கொடுத்தவர் சார்பாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். விரும்பிய எந்தநேரத்திலும் தத்துவம் கொடுத்தவர் இப்பத்திரத்தை நீக்கிக் கொள்ளலாம் (ஊயடிெந உயடெ_நடடநன). தத்துவம் பெற்றவரின் பெயரையும் எப்பொழுதும் மாற்றக்கூடிய வசதி உண்டு.

ஒருவரின் பெயரில் கொடுத்த தத்துவப் பத்திரம், பத்திரம் வழங்கியவரின் மரணத்துடன் அப்பத்திரம் செல்லுபடி இல்லாமல் போய்விடும். தத்துவப் பத்திரம் பெற்ற பிரதிநிதி முக்கியமாக இரண்டு சந்தர்ப்பங்களில் இந்த ஆவணத்தைப் பாவிக்கலாம்.

1. ஓர் ஆதனத்தை வாங்க விற்க, வாடகைக்கு விடும் சந்தர்ப்பங்களில் இந்த தத்துவப் பத்திரத்தைப் பாவிக்கலாம்.
2. தத்துவப் பத்திரம் கொடுத்தவர், நோய்ப்வாய்ப்பட்டிருக்கும் காலங்களில் சில சிகிச்சைகளைப் பெற, சில முடிவுகளை எடுப்பதற்கு நோயாளிக்குப் பதிலாக தத்துவத்தைப் பெற்று வைத்திருப்பவர் அவரின் சார்பாக முடிவு எடுக்க முடியும்.

எனவே நாம் ஒரு தத்துவப் பத்திரத்தை தகுந்தவரிற்குத் தத்துவம் கொடுப்பது நல்ல முடிவாகும்.



உயில் அல்லது இறுதி உயில் (Last Will) என்பது ஒருவர் இறந்தபின் அவரின் செயல்பாடுகளை நிறைவேற்றக் கொடுக்கும் பத்திரம்.
உயில் வழங்கியவர், காலமாகிய பின் அவருடைய சொத்துக்கள் எவ்வாறு பகிர்ந்தளிக்க வேண்டும் என்று, உயிலில் எழுதப்பட்டுள்ளதோ (குறிக்கப்பட்டுள்ளதோ) அவ்வாறே பகிர்ந்தளிக்கப்படும்.

இந்த உயில் எமது வாழ்நாளில் எத்தனை தடவையும் மாற்றி, மாற்றி எழுதலாம். உயில், தத்துவப் பத்திரம் என்பவை நிச்சயம் எழுதி வைத்திருக்க வேண்டும் என்று எந்தச் சட்டமும் கூறவில்லை. இவ்வாறு எழுதி வைப்பதனால் எதிர் காலங்களில்வரும் பல சிக்கல்களுக்கு இதுவே சரியான முடிவைக் கொடுக்கும். ஒருவர் உயில் எழுதாவிட்டால், அவர் வாழும் மாகாணம் மற்றும் பிரதேசங்களின் சட்டங்களின்படியே முன்னிலைப்படுத்தப்படும்.

உயிலை எழுதுபவர் குறைந்தது 18 வயதை உடையவராக இருக்க வேண்டும். தன்னுடைய சிந்தனையில் எழுத வேண்டும். மற்றவர்களின் அழுத்தம் காரணமாக எழுதுவதைத் தவிர்ப்பது சிறப்பு.

பொதுவாக உயில் மற்றும் தத்துவப் பத்திரங்களை ஒரே காலத்தில் எழுதுவதால் செலவுகள் குறைக்கப்படும். அத்துடன் பூர்த்தி செய்யப்படும் தத்துவப் பத்திரம் மற்றும் உயில் போன்றவற்றில் ஒரு பிரதியை சட்டவல்லுநரின் அலுவலகத்தில் வைத்திருந்தால், சில எதிர்காலச் சிக்கல்களை இலகுவாகத் தவிர்க்கலாம்.

பொதுவாக, ஒருவர் காலம் முழுவதும் சேர்த்த சகல சொத்துக்களும், அவர் விரும்பியவாறே அந்தச் சொத்துக்களைப் பயன்படுத்துவதே, பகிர்ந்தளிப்பதே முறையானது. இவ்வாறான உயில் இல்லாத சந்தர்ப்பங்களில் அவரின் விருப்பமில்லாத விடயங்களும் நடைபெறக்கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு. ஒருவர் உயில் எழுதும்போது திருமணம் ஆனவராக இருந்தால் கணவன் மற்றும் மனைவி இருவரும் சேர்ந்து முடிவு எடுத்து எழுதுவது நல்லதாகலாம்.

இது ஒரு முக்கிய ஆவணம் என்பதால், இவை பற்றிய தகுந்த ஆலோசனைகளை, தகுந்தவர்களிடம் பெற்று, ஆலோசித்து பூர்த்தி செய்வது நல்லது.

18 வயதிற்குக் குறைவான பிள்ளைகள் இருப்போர், மரணம் சம்பவிக்கும் சந்தர்ப்பத்தில் பிள்ளைகளை 18 வயது வரை பாதுகாக்க, ஒரு பாதுகாப்பாளரை பத்திரத்தில் குறித்து வைப்பது முறையானதாகும். அவ்வாறு இல்லாத சந்தர்ப்பத்தில் பாதுகாப்பாளரை அரசு நியமிக்கும்.

உயில் அல்லது தத்துவப் பத்திரம் மிக முக்கியம் என்பதை நாம் நிச்சயம் அறிந்திருக்க வேண்டும்.

எனவே தத்துவப் பத்திரம் (Power of Attorney) ஒருவர் இறக்கும்வரை பாவிக்கப்படும். கடைசி உயில் (Last Will) என்பது குறிப்பிட்டவர் இறந்த பின்பாகப் பாவிக்கப்படும். இதுவே இவை இரண்டிற்கும் உள்ள முக்கிய வேறுபாடாகும்.







இப்புத்தகம் தமிழில் செப்ரெம்பர் 01, 2024அன்று வெளியிடப்பட்டது.

# இலங்கை அதிபர் தேர்தலும், தமிழரின் வாக்குகளும்

## ஞானம்

2024 செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெற இருக்கும் இலங்கை அதிபருக்கான தேர்தலில் இம்முறை தமிழர் தங்களது வாக்குப் பலத்தைக் காட்ட ஓர் அருமையான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இதை ஏன் தமிழ் அரசியல்வாதிகள் வெளிப்படையாகத் தேர்தல் பிரச்சாரங்களின் போது கூறவில்லை?

செப்ரெம்பர் 12ஆம் திகதி வெளியான IHP நிறுவனத்தின் கருத்துக்கணிப்பு அனுர குமார திஸாநாயக்க 36%, சஜித் பிரேமதாச 32%, ரணில் விக்ரமசிங்க 28% மற்றும் நாமல் ராஜபக்ஷ 3% வாக்குகளையும் பெறுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது IHP நிறுவனத்தின் ஓகஸ்ற் முதல் பகுதியில் வந்த கருத்துக்கணிப்பைவிட வித்தியாசமாக இருப்பதுடன் எந்த ஓர் அதிபர் வேட்பாளரும் முதலாவது வாக்கு எண்ணிக்கையில் 50% + 1 வாக்குகளிற்கு மேல் பெற்று வெல்ல முடியாது என்பதை உறுதிசெய்கிறது. இம்முறை வாக்காளர்களது 2 அல்லது 3ஆவது விருப்பு வாக்குகளே இலங்கை அதிபரைத் தெரிவு செய்யும் என எதிர்பார்க்கிறது.



இதனால், இலங்கைத் தமிழர் எல்லோரும் தமது முதல் விருப்பு வாக்கை பா. அரியநேத்திரனிற்கு அளிப்பதன்மூலம் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கலாம். அத்துடன் தமிழர் எல்லோருமே தமது இரண்டாவது விருப்பு வாக்கை இலங்கைத் தமிழரசுக் கட்சி கூறிய மாதிரி சஜித் பிரேமதாசாவிற்கு அளிப்பதன்மூலம் அவரை இலங்கை அதிபராகத் தமிழ்வாக்குகள் மூலம் வரவைக்க முடியும்.

தற்போது கருத்துக்கணிப்பில் முன்னணியில் இருக்கும் அனுர குமார திஸாநாயக்கவினுடைய கட்சியே உயர் நீதிமன்றம் சென்று வடக்கு - கிழக்கு இணைப்பைத் எதிர்த்து வெற்றி பெற்றது. ரணில் விக்கிரமசிங்க மூன்றாம் இடத்தில் இருக்கிறார். அவரை இரண்டாவது தெரிவு மூலம் அதிபராக வெல்ல வைக்க முடியாது. ஆனால், சஜித் பிரேமதாச இரண்டாவது இடத்தில் இருப்பதால் அவரைத் தமிழர் வாக்குகள் மூலம் இலங்கை அதிபராக வெல்ல வைக்க முடியும்.

சஜித் பிரேமதாச தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாகவும், ஒரு புதிய அரசியல் அமைப்புத் திட்டம் உருவாக்கப் போவதாகவும், வடக்கு - கிழக்கை அபிவிருத்தி செய்ய உலகளாவிய முதலீட்டாளர்களுடன் மாநாடு நடத்துவதாகவும் உறுதியளித்துள்ளார். அத்துடன் அவர் கடந்த அதிபர் தேர்தலில் 42%ஆன வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்திற்கு வந்தவர். இக்காரணங்களால் அவருக்கு எல்லாத் தமிழரும் ஒருங்கிணைந்து தமது இரண்டாவது விருப்பு வாக்கை அளிப்பதன் மூலம் அவரைத் தமிழ் வாக்குகளால் இலங்கை அதிபராக வெல்ல வைக்க முடியும்.



எல்லாத் தமிழர்களது முதல் விருப்பு வாக்கை பா. அரியநேத்திரனிற்கு அளிப்பதால் தமிழரின் எதிர்ப்பைக் காட்டலாம். இரண்டாவது விருப்பு வாக்கை சஜித் பிரேமதாசாவிற்கு அளிப்பதன்மூலம் அவரைத்தமிழ் வாக்குகளால் இலங்கை அதிபராக வெல்ல வைக்கலாம். இதனால் இத்தேர்தலில் தமிழர் மதிநுட்பத்துடன் தங்களது முதலாவது, இரண்டாவது விருப்பு வாக்குகளை அளித்து தமிழரின் எதிர்ப்பையும், இலங்கை அதிபரைத் தெரிவு செய்யத் தமது பலத்தையும் காட்டமுடியும்.

# GOAT – திரைவிமர்சனம்

நடிகர் விஜய் தான் நடிக்கும் கடைசிக்கு முதலாவது படம் என்று அறிவித்தது The Greatest of All Time (GOAT) என்ற படம் ஆகும். இப்படம் 2024 செப்ரெம்பர் 5ஆம் திகதி வெளியானது.

இப்படத்தில் விஜய், காந்தி என்ற பெயரில் தீவிரவாதிகளுக்கு எதிராக இரகசியமாகச் செயல்படும் இராணுவ வீரராக நடித்துள்ளார். அவருடன் கல்யாண் (பிரபுதேவா), அனில் (பிரசாந்த்), மற்றும் ஷாம் (அஜய்) ஆகியோர் பணிபுரிகின்றனர். இவர்களின் தலைவர் நசீமாக ஜெயராம் நடித்துள்ளார். வேலை ஒரு பக்கத்திலிருக்க, காந்தி வீட்டில் தனது மனைவி அனு (சிநேகா) மற்றும் மகன் ஜீவனுடன் வாழ்ந்து வருகிறார். அவர்கள் தமது இரண்டாவது பிள்ளையின் பிறப்பை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றனர்.

இவ்வாறு குடும்பம் மற்றும் இரகசிய வேலை என காந்தியின் வாழ்வு நன்றாகச் செல்கையில், இரண்டும் 2008இல் சந்திக்கின்றன. அவ்வேளையில் உண்டாகும் பிரச்சினையால் காந்தி தனது வேலையையும், குடும்பத்தையும் விட்டுவிட்டு விலகுகிறார்.

அப்பிரச்சினை என்ன? 2024ஆம் ஆண்டில் அதன் விளைவுகள் என்ன? என்ற கேள்விகளுக்குப் பதிலை இப்படத்தைப் பார்த்து அறியுங்கள். இப்படத்தின் சிறப்பு, விஜய் இரட்டை வேடங்களில் நடிக்கும் விதமாகும்.



இழப்பைச் சந்தித்த தந்தையான காந்தியின் வேடம், தற்கால இளைஞன் வேடம் என இரு முற்றிலும் வேறுபட்ட வேடங்களில் விஜய் நன்றாக நடித்துள்ளார். குறிப்பாக, இந்த இளம் கதாபாத்திரம், விஜய் வழமையாக நடிக்கும் கதாபாத்திரங்களில் இருந்து மாறுபட்டு இருப்பது சிறப்பாக இருக்கிறது.

அத்துடன், விஜய்யை 25 வயதிற்குள் காட்ட தற்கால தொழில்நுட்பத்துடன் ஒப்பனையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. சில இடங்களில் இவை நன்றாகவும், சில இடங்களில் இவை கவனத்தை படத்தில் இருந்து திசை திருப்புவனவாகவும் அமைகின்றன. அத்தோடு சில காட்சிகளின் அமைப்புத்திறன் குறைவாக இருப்பதாலும் படத்தின் உண்மைத்தன்மை குறைவடைகிறது.

விஜய் தனது வயதுக்கேற்ற கதாநாயகியுடன் கணவன் - மனைவியாக நடித்தது சிறப்பாகவும், மிகவும் இயல்பாகவும் இருந்தது. இவர்களுடன் தங்கள் சமகால கதாநாயகர்களுடன் வரும் காட்சிகள் இயல்பாகவும், மகிழ்வாகவும் இருக்கின்றன. இந்த அனுபவமுடைய நடிகர்களுக்கு அதிக காட்சிகளும் முக்கியத்துவமும் விரிவுமுடைய கதாபாத்திரங்கள் இருந்திருந்தால் படம் இயல்பாகவும் இன்னும் சிறப்பாகவும் அமைந்திருக்கும்.

இவ்வாறு படத்தின் தெளிவின்மையும் தொடர்ச்சி இன்மையும் அதன் தரத்தைக் குறைக்கிறது. ஒரு படத்தில் தீவிர காட்சிகள், புதிய தொழில்நுட்பம், வேறு படங்களின் மேற்கோள்கள், பாடல்கள் போன்றவை நன்றாக இருக்கலாம். ஆனால், GOAT படத்தில் அவை சேர்க்கப்பட்ட விதம் தெளிவில்லாததால் படத்தின் விறுவிறுப்பு குறைவடைகின்றது. குறிப்பாக பாடல்கள் வரும் சந்தர்ப்பங்கள் கதைப்போக்குடன் பொருந்தாமல் அமைகின்றன.



விஜய்யின் இரட்டைக் கதாபாத்திர நடிப்பிற்காகவும், அனுபவமான நடிகர்களுக்காகவும், தொழில்நுட்ப முயற்சிக்காகவும், பொழுதுபோக்கான நகைச்சுவை மற்றும் அதிரடி காட்சிகளுக்காகவும் இப்படத்தைப் பார்க்கலாம்.

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361



நீ எவ்வாறு பேசக் கற்றுக்கொண்டாயோ,
அதேபோல் மௌனத்தையும் கற்றுக்கொள்.
பேச்சு உனக்கு வழிகாட்டலாம்,
ஆனால் மௌனம் நிறைய சந்தர்ப்பங்களில்
உன்னைப் பாதுகாக்கும்...

# நானிலம் போற்றும் நட்பு - 52



– அகணி –
authorakani@gmail.com

இதுவரை திருக்குறளில் உள்ள நட்பு பற்றிய கருத்துக்களுடன் கட்டுரையைத் தொடங்கியிருந்தோம்.

இப்பொழுது திரிகடுகம் நூலின் முப்பதாம் செய்யுளைக் கவனிப்போம்.

"தன் நச்சிச் சென்றாரை எள்ளா ஒருவனும்,
மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்,
என்றும் அழுக்காறு இகந்தானும், - இம் மூவர்
நின்ற புகழ் உடையார்."

'நச்சி' என்றால் 'விரும்பி' என்றும் 'அழுக்காறு' என்றால் 'பொறாமை' என்றும் பொருள் கொள்ளுமாறு உரையாசிரியர்கள் விளக்கம் தந்துள்ளனர்.

இந்தச் செய்யுளிற்கான பொருள் "தன்னை மதித்து நடப்பவரை இகழாது இருத்தலும், செல்வம் வந்தபோது நண்பர்களை மறவாமல் இருத்தலும், பகைவரின் செல்வம் கண்டு மகிழ்வதும் செய்தவர் அழியாப் புகழ் உடையார்." என்று உரையாசிரியர்கள் விளக்கம் கொடுத்துள்ளனர்.

புலவரால் இந்தச் செய்யுளில் நட்பு பற்றியும், ஏனைய விடயங்கள் பற்றியும் குறிக்கப்பட்ட அறிவுரைகள் மிகவும் பயனுள்ள அறிவுரைகளாக உள்ளன.

இப்பொழுது குறுந்தொகையில்வரும் நூற்றிப் பதின்மூன்றாவது பாடலைக் கவனிப்போம். இது மார்தீத்தன் என்னும் புலவர் பாடிய பாட்டு. பகலிலே சந்திக்கும் தலைவனுக்குப் புதிய இடத்திலே சந்திக்கும்படி கூறினாள் தோழி. அந்தப் புதிய இடம் எங்குள்ளது என்பதையும் அதன் இயல்பையும் இன்னதென்று விளக்கிச் சொன்னாள். தோழி கூற்று. இது மருதத்திணை சார்ந்தது.

அவனும் அவளும் புதிய காதலர்கள். அவர்கள் பகற் காலத்தில் கொல்லை, கொடிக் காடுகளில் ஒருவரை ஒருவர் சந்திப்பது வழக்கம். யாரும் காணாத ஓரிடத்தில் சந்திக்க வேண்டும் என்பது அவர்கள் ஆசை.

அத்தகைய பாதுகாப்பான இடத்தைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பைத் தலைவியிடமே விட்டுவிட்டான் தலைவன். தோழியும் அவளும் சேர்ந்து நன்றாக எண்ணிப்பார்த்து நல்லதோர் இடத்தைத் தேர்ந்தெடுத்தனர்.

தலைவன் தன் காதலியைத் தேடிவரும் நேரத்திலே தோழி தலைவியை அழைத்துக் கொண்டுபோய் அப்புதிய பொழிலைக் காட்டினாள். தலைவனிடம் தலைவியைச் சந்திப்பதற்குத் தேர்ந்தெடுத்திருக்கும் புதிய இடத்தைக் குறித்துக் கூறினாள்.

"இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் இடம் நல்ல இடம், காதல் உணர்ச்சியை ஊட்டும் இடம். யாரும் வராத தனியிடம்" என்று அந்த இடத்தின் சிறப்பையும், அந்த இடம் எங்கேயிருக்கின்றது என்பதையும் தலைவனுக்குத் தெளிவாக எடுத்துரைத்தாள் தோழி.

"தலைவனே! ஊருக்குப் பக்கத்தில் உள்ளதுதான் அந்தத் தடாகம் அந்தப் பொய்கை இலிருந்து கொஞ்சத்தூரம் போனால் அங்கே ஒரு சிறிய காட்டாறு உண்டு. அந்தக் காட்டாறு பொய்கைக்கு வெகுதொலைவில் இருப்பதாக நினைக்க வேண்டாம் அந்தக் காட்டாற்றங்கரையிலே ஒரு நல்ல சோலையிருக்கின்றது. அது மரஞ்செடி கொடிகள் செழித்து வளர்ந்திருக்கும் சோலை, அடர்ந்து தழைத்து நிழல் தரும் அழகிய சோலை.

"ஊர்க்கும் அணித்தே பொய்கை. பொய்கைக்குச்
சேய்த்தும் அன்றே சிறுகான் யாறே.
இரைதேர் வெண்குருகு அல்லது யாவது
துன்னல் போகின்றால் பொழிலே. யாம்எம்
கூழைக்கு எருமணம் கொணர்கம் சேறும்
ஆண்டும் வருகுவள் பெரும் பேதையே".

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.
"அந்தப் பொழிலுக்கு வேறு யாரும் வரமாட்டார்கள். காட்டாற்று நீரிலே இரைதேடும் நாரை ஒன்றுதான் அந்தப் பொழிலிலே வந்து தங்கிக் களைப்பாற்றிக் கொள்ளும். நாங்கள் எங்கள் தலைமயிரைச் சுத்தம் செய்துகொள்ளுவதற்குக் களிமண் எடுப்பதற்காக அங்கே வருவோம். அந்தக் காட்டாற்றில் களிமண் எடுத்துக்கொண்டு திரும்புவோம். சோலைக்குள் வரமாட்டோம். பெரிய பேதையாகிய என் தலைவி அங்கும் வருவாள். ஆதலால் நீ காட்டாற்றங்கரையில் உள்ள அப்பொழிலிலே உன் காதலியை இனிக்காணலாம்" என்று இவ்வாறு புதிய இடத்தைப்பற்றிக் கூறினாள் தோழி. இந்த நிகழ்ச்சியை உரைப்பதே இந்தப் பாடல்.

இப்பொழுது குறுந்தொகையில்வரும் நூற்றிப் பதின்நான்காவது பாடலைக் கவனிப்போம். இது பொன்னாகன் என்னும் புலவர் பாடிய பாட்டு. தலைவன் குறித்த இடத்திலே தலைவியை நிறுத்திவிட்டு வந்த தோழி தலைவனிடம் கூறியது. இது குறிஞ்சித்திணை சார்ந்தது.

நெய்தல் நிலத்திலே வாழ்கின்றவள் தலைவி. அவள் இருக்கும் இடத்திற்கு வந்து அவளைச் சந்திக்க முடியவில்லை தலைவனுக்கு. ஆதலால், அவன் தோழியின் உதவி யால் தான் குறிப்பிட்ட இடத்திலே தலைவியைக் காண விரும்பினான். தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள காதல் பிணைப்பைத் தோழி நன்றாக அறிவாள். தலைவனைச் சந்திக்க முடியாமல் தலைவி வருந்திக் கொண்டிருப்பதும் அவளுக்குத் தெரியும். ஆதலால் தலைவன் எண்ணத்திற்கு இணங்கினாள்.

தலைவன் தன்னுடைய தேரிலேறி வந்தான். தோழியைச் சந்திப்பதற்காகக் காத்துக் கொண்டு நின்றான். தோழியும் தலைவியைத் தலைவன் குறித்த இடத்திலே கொண்டுவந்து விட்டாள். தலைவி வந்திருக்கும் செய்தியை அறிவிப்பதற்காகத் தலைவன் காத்திருக்கும் இடத்திற்குக் கடுகி வந்தாள். அவனிடம் குறித்த இடத்திலே தலைவி வந்திருக்கும் செய்தியைக் கூறுகின்றாள்.




"நெய்தல் பரப்பின் பாவை கிடப்பி
நின்குறி வந்தனென், இயல் தேர்க் கொண்க!
செல்கம் செலவியம் கொண்மோ அல்கலும்
ஆரல் அருந்த வயிற்ற
நாரை மிதிக்கும் என்மகள் நுதலே."

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.
"நெய்தல் நிலத்தின் ஒரு பகுதியிலே எனது பதுமையைக் கிடத்தி வைத்துவிட்டு நீ இருக்கும் இடத்திற்கு வந்தேன். நல்ல வேலைப்பாடமைந்த தேரையுடைய தலைவனே! எனது அந்தப் பாவை தனியாகக் கிடப்பதனால், ஆரல் மீனை அருந்தி நிறைந்த வயிற்றையுடைய நாரைகள் குனிய முடியாமல் அண்ணாந்து நடந்து திரியும். அவை என் மகளாகிய அப்பாவையின் நெற்றியை மிதித்துவிடும். அதனால் என் பாவையின் அழகு சிதையும். ஆகையால் யாம் போகின்றோம். அவளை அவள் இடத்திற்குப் போகும்படி நீயே ஏவுவாயாக" என்று கூறினாள்.

இப்பொழுது குறுந்தொகையில்வரும் நூற்றி இருபத்தொன்றாவது பாடலைக் கவனிப்போம். இது கபிலர் பாடிய பாட்டு. தலைவன் செய்த குறியென்று எண்ணி முதலில் சென்று ஏமாந்த தலைவியிடம் தோழி சென்று தலைவன் வந்திருக்கிறான் என்று சொல்லிய போது அவள் கூறிய விடை. இது குறிஞ்சித்திணை சார்ந்தது.

இரவிலே தலைவியைச் சந்திப்பதற்காக வரும் தலைவன் தான் வந்தவுடன் சில அடையாளங்களால் அறிவிப்பான். மரத்தில் உறங்கும் பறவைகளை எழுப்பி விடுவான். இவை தலைவன் செய்யும் அடையாளங்களுக்கான செயற்பாடுகள்.

ஒரு நாள் இரவு இத்தகைய அடையாளத்தில் ஏதோ ஒன்றால் தலைவி, தலைவன் குறித்த இடத்திற்குப் போனாள். அவனைக் காணவில்லை. திரும்பி விட்டாள். பின்னர் உண்மையாகவே தலைவன் அந்த இடத்திற்கு வந்தான். வழக்கம்போல் தான் வந்திருப்பதற்கான குறிகளைச் செய்தான். அதைக் கண்ட தோழி தலைவியிடம் போய், அவன் வந்திருப்பதை அறிவித்தாள். தலைவியோ முன்பு ஒருமுறை தேடிச் சென்று ஏமாந்து போனவள் ஆதலால், இப்பொழுதுள்ள குறியையும் அவள் நம்பவில்லை.

"நீ காண்பது பொய்க் குறியாக இருக்கலாம். அதை நம்பி நாம் அங்கே போய் ஏமாறுவதில் என்ன பயன்? போய் ஏமாந்து வருவதைவிடப் போகாமலிருப்பதே நல்லது" என்று பதிலுரைத்தாள் தலைவி.

"மெய்யோ! வாழி தோழி! சாரல்
ஆற்றுப் பாயாத் தப்பல், ஏற்ற
தான்குறி வாயாத் தப்பற்குத்
மை பட்டன்ன மாமுக முசுக்கலை
கோட்டொடு போகி யாங்கு, நாடன்
தாம் பசந்தன என் தடம் மெல் தோளே!"

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.
